வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- நாராயணசாமி

தேதி 27.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, கோவா, கர்நாடகா, ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களுக்கு இன்று முதல் 4 நாட்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 129 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் 2025-ஆம் ஆண்டு வரி சீர்திருத்தங்களுடன் ஒரு புதிய அத்தியாயத்தை படைத்துள்ளது.

புதுச்சேரியில் அண்ணா திடலில் 17 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு அரங்கத்தை மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய் இன்று திறந்து வைத்தார்.

*குடியரசு தலைவர்*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, கோவா, கர்நாடகா, ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களுக்கு இன்று முதல் 4 நாட்களுக்கு பயணம்

மேற்கொள்கிறார். முதற்கட்டமாக இன்று கோவா செல்லும் அவர் நாளை கர்நாடகாவில் உள்ள கார்வார் துறைமுகத்தில் இருந்து நீர்மூழ்கி கப்பலில் கடற்பயணம் மேற்கொள்கிறார்.

*மன்கி பாத்*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 129 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும், ஒலிபரப்ப கேட்கலாம். ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும்.

*பிரதமர்*

மாநிலங்களின் தலைமை செயலாளர்கள் பங்கேற்றுள்ள தேசிய மாநாட்டின் 2-ஆம் நாள் அமர்வு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று புதுடெல்லியில் நடைபெறுகிறது. நேற்று தொடங்கிய இந்த 3 நாள் மாநாட்டில் மத்திய-மாநில அரசுகளிடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை மரியாதை

நிமித்தமாக நேற்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார். நாட்டின் மனித மூலதன திறனை அதிகரிக்கவும் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் எதிர்காலத்திற்கான வளர்ச்சியை விரைவுபடுத்தவும் இந்த மாநாடு ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை வடிவமைப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பின்பற்ற வேண்டிய சிறந்த நடைமுறைகள் மற்றும் உத்திகளை உள்ளடக்கிய வளர்ந்த இந்தியாவுக்கான மனித மூலதனம் என்ற கருப்பொருளில் இந்த மாநாடு கவனம் செலுத்துகிறது. இதில் ஆரம்பகால குழந்தைப் பருவ கல்வி, பள்ளிக் கல்வி, திறன், உயர்கல்வி, விளையாட்டு மற்றும் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் ஆகிய 5 முக்கிய துறைகளில் விரிவான விவாதத்திற்கு முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது. மாநிலங்களில் கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து கவனம் செலுத்தும் 6 சிறப்பு அமர்வுகள் இம்மாநாட்டில் இடம் பெறுகின்றன. இம்மாநாட்டில் தலைமை செயலாளர்கள் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மூத்த அதிகாரிகள், துறை சார் வல்லுனர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

*அஸ்வினி வைஷ்ணவ்*

மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில் மின்னணு பொருட்களின் ஏற்றுமதியில் உலக அளவில் இந்தியா 3-ஆவது இடத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக 7-ஆவது இடத்தில் இருந்து இந்தியா 3-ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளதாகவும் அவர் கூறி உள்ளார். மொபைல் போன் உற்பத்தியில் இந்தியா 2-ஆவது பெரிய நாடாக உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 5 ஆண்டுகளில் இத்துறை 1 லட்சத்து 30 ஆயிரம் வேலை வாய்ப்புகளை வழங்கி உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். உற்பத்திக்கான இந்தியா இயக்கம், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் போன்றவை மின்னணு பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியின் வளர்ச்சிக்கு காரணம் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

*வரி சீர்திருத்தம்*

2025-ஆம் ஆண்டில் வரி சீர்திருத்தங்கள் குறித்த ஒரு செய்தி தொகுப்பு

(வாய்ஸ்)

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் 2025-ஆம் ஆண்டு வரி சீர்திருத்தங்களுடன் ஒரு புதிய அத்தியாயத்தை படைத்துள்ளது. கொள்கைகள் அனைத்தும்

வளர்ச்சிகளாக மேம்படுத்தப்பட்டு, ஆக்கப்பூர்வமான சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மாநிலங்கள் மற்றும் குடிமக்களிடையே வலுவான தொடர்பையே வரி சீர்திருத்தங்கள் பிரதிபலிக்கின்றன. 1930-ஆம் ஆண்டு உப்பு மீது சுமத்தப்பட்ட வரி மீது தொடங்கி 1970-ஆம் ஆண்டுகளில் 97.5 சதவிகித அளவிற்கு வரி விதிக்கப்பட்டதை நாட்டின் வரி வரலாறு புலப்படுத்துகின்றது. பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டு வந்துள்ள வரி சீர்திருத்தங்களின் தொடர்ச்சியாக இந்த ஆண்டு வரி சீர்திருத்தங்களின் ஆண்டாக கருதப்படுகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முக்கிய தூண்களாக இந்த ஆண்டின் சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் திகழ்கின்றன. கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதியில் இருந்து இருவிகித சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்டதால் 33 உயிர் காக்கும் மருந்துகளுக்கு முற்றிலும் விலக்கு அளிக்கப்பட்டது. பால், ரொட்டி, உலர் பழங்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு 5 சதவிகிதமாகவும், சிறிய ரக மோட்டார் சைக்கிள், குளிர்சாதனப் பொருட்களுக்கு 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டதால் சரக்கு மற்றும் சேவை வரி நாட்டு மக்களுக்கான தீபாவளி பரிசாக மத்திய அரசு அறிவித்தது. இந்த வரி குறைப்பால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், வீட்டு உபயோகப் சாதனங்கள், மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள், உள்ளிட்ட

பொருட்களின் விலை குறைந்துள்ளது. ஆயுள் காப்பீடு, மருத்துவ காப்பீடு உள்ளிட்டவற்றிற்கும் முற்றிலும் வரி விலக்கு அளிக்கப்பட்டது மருத்துவ துறையின் பெரும் சாதனையாக கருதப்படுகிறது. வரி சீரமைப்பின் காரணமாக நாட்டு மக்களின் வாழ்வு மேம்படுத்தப்பட்டதுடன் வர்த்தகமும் எளிமையாக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி*

புதுச்சேரி அண்ணாதிடலில் 17 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு அரங்கத்தை மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய் இன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் புதுச்சேரி ராஜ்பவன் தொகுதி சின்னையாபுரத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்காக அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 220 குடியிருப்புகளை திறந்து வைத்து, 26 துணை மின் நிலையங்கள், உயர் மின்னழுத்த புதைவடம் அமைத்தல் மற்றும் அதனை சார்ந்த பணிகளையும் அவர் இன்று தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர் வறுமை இல்லாத நாடாக இந்தியா மாற வேண்டும் என்ற சுவாமி விவேகானந்தரின் நோக்கத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார். மேலும் மத்திய அரசின் திட்டங்கள் புதுச்சேரியில் வேகமாக செயல்படுத்தப்பட்டு

வருவதன் மூலம் புதுச்சேரி வளர்ச்சி பாதையில் செல்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு. ரங்கசாமி பசியில்லா மாநிலமாக புதுச்சேரி இருக்க வேண்டும் என்றும் அடிப்படை வசதிகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். ஆயிரத்து 500 பேருக்கு விரைவில் வீடு கட்ட நிதி வழங்கப்பட உள்தாகவும் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் (வாய்ஸ்-ரங்கசாமி)

நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், சட்டப் பேரவை தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி, மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயலர், புதுச்சேரி பொலிவுறு நகர திட்ட தலைமை செயல் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-வரி*

புதுச்சேரி உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட மக்கள் தங்களது வீட்டு வரி, சொத்து வரி, சேவை வரிகளை டிசம்பர் மாதம் முதல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை அனைத்து ஞாயிற்றுகிழமைகளிலும்,

தட்டாஞ்சாவடி, வி.வி.பி நகரில் உள்ள வரி வசூல் மையத்தில் தங்களது நிலுவையில் உள்ள வரிகளை செலுத்தலாம் என்று உழவர்கரை ஆணையர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மையம் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரையிலும் மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட்

இந்தியா-இலங்கை மகளிர் அணிகளுக்கு இடையேயான 4-ஆவது மகளிர் 20- ஓவர் கிரிக்கெட் போட்டி, திருவனந்தபுரத்தில் நாளை நடைபெறுகிறது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-க்கு 0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, கோவா, கர்நாடகா, ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களுக்கு இன்று முதல் 4 நாட்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 129 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் 2025-ஆம் ஆண்டு வரி சீர்திருத்தங்களுடன் ஒரு புதிய அத்தியாயத்தை படைத்துள்ளது.

புதுச்சேரியில் அண்ணா திடலில் 17 கோடி ரூபாய் செலவில் கட்டடப்பட்டுள்ள விளையாட்டு அரங்கத்தை மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய் இன்று திறந்து வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 27.12.2025/Script.

---------------------